**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE MODERNIZATION AND UPGRADATION PROJECT OF CHENNAI KASIMEDU FISHING HARBOUR PROPOSED BY M/S. CHENNAI FISHING HARBOUR MANAGEMENT COMMITTEE & M/S. CHENNAI PORT AUTHORITY.**

| | | |
|---|---|---|
| **Name of the Project** | : | Modernization and Upgradation of Chennai Kasimedu Fishing Harbour |
| **Date & Time** | : | 19.12.2023, 11.00 A.M. |
| **Venue** | : | Ramjan Mahal, No.74/52, West Madha Church Street, Royapuram, Chennai - 13. |

**Present:**

| | | |
|---|---|---|
| Tmt. Rashmi Siddharth Zagade, I.A.S | : | District Collector<br>Chennai District |
| Dr. R. Jayamurugan | : | District Environmental Engineer<br>Tamil Nadu Pollution Control Board<br>Chennai |
| Thiru. S. Viswanathan, I.A.S | : | Deputy Chairman<br>Chennai Port Authority |
| Thiru. N. Sri Ramachandra Murthy | : | Chief Engineer<br>Chennai Port Authority |
| Tmt. R.Sugantheswari Priyatharishini | : | Deputy Chief Engineer<br>Chennai Port Authority |
| Tmt. K. Faiz Sultana | : | Executive Engineer<br>Chennai Port Authority |

The list of attendees who were present in the public hearing meeting is annexed with this minutes of the meeting.

At the outset, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, welcomed the District Collector, Chennai District, Deputy Chairman, M/s. Chennai Port Authority, and the Chief Engineer and other senior officials of M/s. Chennai Port Authority, members of M/s. Chennai Fishing Harbour Management Committee, Technical Advisory Team, Police, Press & Media and the Public who had participated in the public hearing meeting for the proposed modernization and upgradation of Chennai Kasimedu Fishing Harbour project.

The District Environmental Engineer explained about the Environment Impact Assessment Notification dated 14.09.2006, Ministry of Environment, Forest and Climate Change, Government of India, pertaining to the Port and Harbour category as notified in the schedule and stated that project of new construction, expansion or modernization of harbours having capacity of 10,000 tonnes per annum has to obtain Environmental Clearance. Further the District Environmental Engineer requested the participants to express their views and suggestions to forward the same to the Ministry of Environment, Forest and Climate Change, Government of India. The District Environmental Engineer made a request before the public to extend their cooperation to conduct the public hearing meeting peacefully.

The District Collector welcomed all on behalf of the District administration and highlighted about the important features of the project and requested the public to express their views freely. The District Collector said that all the views expressed by the public will be recorded and submitted for further action.

Thiru. S. Viswanathan, I.A.S., Deputy Chairman, M/s. Chennai Port Authority, pointed out that announcement was made in 2021 budget for the modernization and upgradation of Chennai Kasimedu Fishing Harbour project and allocation of fund of Rs.97.95 Crores has been made by the Central Government. The Deputy Chairman highlighted all important features which have been included in the modernization & upgradation project. Further he added that once the project is completed, it will be very useful to the fishing community.

Tmt. K. Faiz Sultana, Executive Engineer, M/s. Chennai Port Authority made a detailed power point presentation about the proposed modernization and up gradation of Chennai Kasimedu Fishing Harbour project and said that the project encompass 26 components and it will be implemented in two phases. The first phase covers 17 components and second phase will be 9 components. The Executive Engineer briefed all the components of the project during the meeting as below.

- Ship lift facility and Boat repair yard would be setup at the cost of Rs. 10 crores which is inclusive of spare parts selling complex for Boat repairing at the cost of Rs. 60 Lakhs
- Permanent compound wall equipped with 2 Nos. of Arch Entrance is proposed to be constructed under this project. Two-lane peripheral road with pedestrian path, storm water drain, cable trench would be established at the cost of Rs. 12 Crores

- Fish handling shed at the Trawler Wharf with CCTV camera and adequate illumination would be set up at a cost of Rs.6 crores.
- Cleaning, Packaging and Cold Storage Complex with 5 units will be developed near North Low Level Wharf at a cost of Rs. 1 crore.
- Administrative building, centralized control block with Commercial Complex including ATM, Hotel, and Clinic would be setup at a cost of Rs.3 crores.
- Vessel Monitoring and Control System would be setup at a cost of Rs.1 crores to facilitate warning alert to the fishermen about the natural calamities such as cyclone, rain, etc. and to carry out rescue operations.
- Two parking slots for two-wheeler & four-wheeler would be setup at a cost of Rs.85 Lakhs and electrical high mast lights & street light arrangements would be set up at a cost of Rs.2.0 crores.
- Sanitary Complex would be setup near southern Wharf at the cost of Rs. 20 Lakhs.
- Over Head Water Tank (1,00,000 litres capacity), Low Level Reservoir (2,00,000 litres capacity) and internal water distribution system would be setup at a cost of Rs. 4 Crores.
- Drinking water arrangements by providing RO plants of 25 LPH capacity and 500 LPH capacity would be setup at a cost of Rs. 50 Lakhs.
- Solid and liquid waste management system, (ETP/STP) would be setup at a cost of Rs. 1.50Crores.
- CCTV surveillance system would be setup at a cost of Rs. 50 Lakhs to ensure the safe environment inside the fishing harbour premises.
- Maintenance Dredging for entire Fishing Harbour will be carried out at the cost of Rs. 3 Crores.
- New open shed for Prawn sale point with CCTV cameras at a cost of Rs. 2.36 Crores and new net mending shed at Northern Wharf would be setup at a cost of Rs. 2.20 Crores.
- In western side, paved parking area for trucks will be setup at a cost of Rs. 48 Lakhs and new net mending shed at southern side would be setup at a cost of Rs. 80 Lakhs.
- New shed for fish cutting stalls and a permanent building with 30 rooms for stacking of unsold fishes would be constructed near the retail shops.
- Flooring in and around retail shop, and widening of existing internal roads, repair of drains would be carried out under this project.

A video clip showing the perspective view of the proposed Modernization and Upgradation of Chennai Kasimedu Fishing Harbour was screened during the meeting. On behalf of the M/s. Chennai Port Authority, the technical team

M/s. Hubert Enviro Care System (P) Limited, continued the presentation and explained about the environmental impacts identified, environment management plan both construction and operational phase of the project. The team explained about the classification of CRZ areas with respect to location of project. The Terms of Reference (TOR) issued dt 07.03.2023 and the revision in the Terms of Reference (TOR) dt 06.06.2023 were also explained. The technical team highlighted the following points during the meeting.

- The existing facilities and the proposed structures of the Chennai Fishing Harbour were explained.
- Location of Water bodies, national parks, heritage buildings, reserve forests, sites under the control of the Indian Army, monumental structures, ports, roads and railway stations were also explained in the meeting.
- The water and power requirements, waste water generation and disposal details for this project were explained in the meeting.
- Sources of air pollution were identified during construction and operational phase and measures to be taken to rectify it were also explained during the meeting.
- Mitigation measures on water management, noise management, marine ecology management, impact of oil spill management on natural resources during construction and operational phase were explained.
- Dredging and desilting of Chennai Fishing Harbour and its mitigative measures were explained.

After completion the detailed technical presentation, the participants were requested to offer their views and suggestions on the proposed modernization and upgradation of Chennai Kasimedu Fishing Harbour project. The views suggestions delivered by the participants in the meeting are as below.

1. **Mr. C. N. Kesavaraman, President, Fiber Boat and Glass Fibre Boat Owners Association. Nagooran Thottam, Old Washermenpet, Chennai**

   He thanked for organizing the public hearing meeting and requested not to make any restriction to them to go inside the fishing harbour at any time to carry out their activities, to check their boats, fishing nets, as the modernization project encompass the proposal for the construction of entrance arch with gate.

Also requested the management to arrange rapid rescue boats to search the boats missing if any while carrying out fishing in the deep sea.

He made a request for the construction of additional wharfs at Kasimedu, Nagooran Thottam to berth their mechanized boats, High-Mast Lighting system to ensure the protection of their belongings and boats.

He requested the Government to fix price for the fishes sold by them and not to collect tax for the goods and equipment utilized for fishing.

Also requested to provide display board highlighting the various components of the projects with cost estimate at the site and for the establishment of fish development park for the upliftment of their society.

One person who was attending the meeting raised their voice to provide copy of power point presentation of the project to all the participants in the meeting and informed that there was no proper publicity given for the public hearing meeting.

The District Environmental Engineer informed that public notice for the public hearing was issued in advance by the Tamil Nadu Pollution Control Board and the same was published in the Tamil daily "Dina Thanthi" and in English daily "New Indian Express" on 16.11.2023.

2. **Hon'ble MLA, Thiru. I Dreams R. Murthy, Royapuram Legislative Assembly Constituency, North Chennai**

The Hon'ble MLA of Royapuram Legislative Assembly Constituency during his speech said that he welcomed all who had gathered in the public hearing meeting as an MLA of Royapuram Assembly Constituency. The Hon'ble MLA expressed the social importance of the project to the fishermen community and the modernization facilities included in this project.

Also informed that amount sanctioned approximately of Rs.100 crores by the Government exclusively to this project is very useful for the development of fishermen society.

The Hon'ble MLA made a request in the meeting to clarify that when the project will be executed and completed. Also asked about the time duration for the implementation of the project.

3. **Hon'ble MLA Thiru. J J Ebenezer, Dr. Radhakrishnan Nagar Assembly Constituency, North Chennai**

The Hon'ble MLA of Dr. Radhakrishnan Nagar Assembly Constituency during his speech informed that this is a long pending dream project of the welfare of fishermen society which was constantly requested to the District Collector for the speedy execution of the project.

The Hon'ble MLA said that the views, suggestions, has to be obtained from the representatives of the fishermen society from the associations to include in this project. Further he added that there are no alternative views exist on implementation of the said project.

The Hon'ble MLA spoke about the requirement of ATM facility and protected water supply to the public in the Fishing Harbour. Further Hon'ble MLA requested the cooperation of the Chennai Port Authority in the event of implementation of any welfare scheme under Member of Legislative Assembly fund granted by the government. Also requested to provide display board highlighting the various components of the projects with cost estimate at the site.

The Hon'ble MLA made a request in the meeting to clarify that when the project will be executed and completed. Also asked about the time duration for the implementation of the project.

4. **Mr. E. Arumugam, President, Chennai Singaravelar Gillnet Double Engine Fibre Catumaran Boat Fishermen's Alliance Welfare Association, Pudhuvannai, Chennai**

He requested to allocate space for berthing of 300 Fiber Boats inside the fishing harbour and for the allocation of separate space for the establishment of repair yard for 25 engines.

Further he made a request to provide alternate space within the fishing harbour in the event of eviction of land from the persons those who established their shed in the harbour while implementing the formation of new roads.

He requested to provide Hi Mast lighting system in the three predominant locations namely Poondi Thangammal Street, Nagooran Thottam , Anna Nagar and Nathan breakwater under this scheme.

Construction of boat berthing facilities has to be established at Nagooran Thottam, Anna Nagar & Arasu Meenavar colony and Poondi Thangammal street he said. Further he submitted a representation containing the above demands to the District Collector during the meeting.

5. **Thiru. V. Thesappan, Vice President, Chennai, Thiruvallur, Kancheepuram District Fish Boat Owners Welfare Association, New Washermenpet, Chennai**

He spoke that the fishing harbour is the livelihood for the fishermen society but it is functioning even without basic amenities for past 25 years and he requested to provide necessary basic facilities in this project for the welfare of fishermen society and boat owners.

6. **Mr. R. Varadhan, President, Chennai Deep Sea Gill Net (M) Longline Tuna Fishing Boat Owners Association, Kasimedu, Chennai**

He requested that the project proposed for the fishermen society should be executed in a speedy manner and for the construction of covered shed of 50 metres length in N4 fish landing centre. Also requested to provide fuel filling stations, installation junction box for electric power in all the wharfs.

7. **Thiru. K. Kabilan, Chennai Fibre Boat Fishermen Welfare Association, Royapuram, Chennai**

He informed that it is a dream project of third-generation fishermen society like him and the same should be implemented in a grand manner. He requested for the construction of compound wall, covered shed, slipway, boat lifting facility inside the fishing harbour under this scheme. He also expressed his expectation for the proper administration and maintenance of the fishing harbour after implementation of this project.

8. **Thiru. N. Rajasekharan, Zonal representative, 49th Ward, Royapuram, Chennai**

He requested all basic facilities should be provided for the fishermen society in this project.

9. **Mr. Raja, National General Secretary, All India Fishermen's Association, Royapuram, Chennai**

In 1983, land acquired for fishing harbour belongs to fishermen community and it was handed over to Chennai Port Trust to develop fishing harbour with international standards. Hence the land should be handed over to Fisheries Department, Government of Tamil Nadu, he said.

He criticized the activities of Chennai Fishing Harbour Management Committee, and stated that no views/ suggestions were requested

from the fishermen society, Welfare Associations about the proposed project.

He alleged that no dredging was carried out in the fishing harbour, and made a request for dredging. Also informed that no facilities are established inside the fishing harbour for the proper management of solid waste, water supply facilities to the Ice plants, and no space allocated for fishermen to dry and for the sale of fish inside the fishing harbour premises.

Also informed that the associations of the fishermen community have not been invited for this meeting to express their views and suggestions. He requested that this project should be developed on par with international standards and for providing employment opportunities to the fishermen communities with this project.

10. **Mr. Y. Mohammad Farooq, North Chennai District President, Aam Aadmi Party, Royapuram, Chennai**

He informed that there was no proper sanitation facilities established in the fishermen areas and the existing facilities also have not been maintained properly. He requested for providing basic amenities for the fishermen to improve their living environment.

Further he made a request to include the construction of Toilets, Restrooms, and separate facilities for the traders inside fishing harbour in the project. Further he stated that the project does not speak about the collection of rent for vehicle parking.

11. **Mr. Munusamy, District president state fishermen's wing, Bharatiya Janata Party**

He welcomed this project and requested for proper management of fish waste by involving Self-help groups to convert the waste into manure.

Further he informed that the fund for this project was sanctioned by the Central Government in order to modernize & upgrade the existing facility of the Chennai Fishing Harbour and made a request to execute project jointly with the cooperation of Central Government, State Government and Greater Chennai corporation.

He also requested that one Police Station has to be established inside the fishing Harbour to prevent the unwanted incidences including theft. Further he requested for establishing library facility exclusively for the students from fishermen community inside the fishing harbour.

Also made a request for alternate business facilities to the fishermen communities during non-fish catching period. Further, he made a demand that the Chennai Fishing Management Committee shall not increase the fee and exemption of fee during non-fish catching period from the fishermen.

The Chennai Fishing Harbour Management Committee shall spend their CSR fund for providing financial support to the youths those who have scored high marks from the fishermen communities.

12. **Dr. Nanjil P. Ravi, President, All Fishermen's Association, Tondiarpet, Chennai**

He welcomed this project and opposed the proposed construction of road from N4 Police station to Zero gate within the premises of fishing harbour. Also requested for the proper solid waste management system within the premises of fishing harbour.

13. **Mr. V. Sankar, General Secretary, Fishermen People's Front Party, Royapuram, Chennai**

He informed that this public hearing meeting should have been communicated to public 15 days well in advance and it should be addressed to all fishermen associations. He also raised his apprehension on collection of entrance fee if any after implementation of this proposed project also informed that Chennai Port Authority so far has not granted any relief measures to the fishermen community.

Also informed that management of fishing harbour has not allocated space for the fishermen to dry fish catches and informed that space is allocated other than fishermen.

While Thiru. R. Jayakumar, President, Shrimp Weighing Merchants Association, Kasimedu, Chennai, tried to start to deliver his views, a person raised his voice and said that the funds allocated for the project should be returned and hence a sudden commotion happened in the meeting.

The meeting continued after the police, the Hon'ble Royapuram MLA and Hon'ble Dr. Radhakrishnan Nagar MLA requested the public to cooperate to conduct the meeting peacefully.

14. **Mr. K. Rajendra Babu, Chairman, Chennai Fishermen Welfare Association, Royapuram, Chennai**

He spoke about the difficulties faced by fishermen communities and also welcomed this project. He also requested to include proper lighting facilities to the small traders inside the fishing harbour and playground for the fishermen in this project.

Meanwhile the District collector thanked everyone those who had participated in the meeting and informed that the views, suggestions, pointed out by the public will be recorded and forwarded to State Level Environmental Impact Assessment Authority for further action.

15. **Mr. K. Bharathi, South Indian Fishermen's Association, Nochikuppam, Mylapore, Chennai**

He welcomed this project and stated that the project will be beneficial for the livelihood and development of the fishermen community.

He raised his objections on draft Coastal Zone Management Plans (CZMPs) released for Chennai District from the maps no.104 to 109 wherein it has proposed to extend the administrative jurisdiction of Chennai Port Authority to 7km distance both in the Northern and Southern side with respect to the existing administrative jurisdiction of the Port Authority and also requested to drop the proposal furnished in draft Coastal Zone Management Plans pertaining to map no. 104 to 109 for Chennai District.

16. **Mr. J. Kosumani, Secretary, State Fishermen's Wing, All India Anna Dravida Munnetra Kazhagam, Mylapore, Chennai**

He welcomed this public hearing meeting for providing opportunity to express to solve the basic problems and difficulties faced by the fishing community.

He made a demand to change the administrate control of Chennai Fishing Harbour as vested with Chennai Port Authority to the Government of Tamil Nadu. He expressed his views stating that this project will facilitate to develop basic infrastructure facilities which has to be implemented for the welfare of the fishermen community 25 years before. Also requested to implement storm water drainage system and sewage treatment plant in this proposed project.

17. **Mr. Mahesh, President, Traditional Fishermen's Association, Nochikuppam, Adyar, Chennai**

He welcomed this project and informed that the project should have to be implemented long back itself. He requested not to collect any entry fee to go inside the fishing harbour as the modernization project encompass the proposal for the construction of compound walls. Chennai Port Authority should discuss with representatives of fishermen community before implementation of the any projects in future, he said.

18. **Thiru. P.Kodandan, President, North Chennai Fishermen's Villages United Council, Kasimedu Beach, Royapuram, Chennai**

He welcomed this project and also requested to construct closed shed for the fish selling area inside the fishing harbour. Also requested to extend plot area allocated to traders for selling of fish from 15'x15' to 1000 Sqft. Further he requested for the construction of the compound wall all around the fishing harbour premises so as to prevent unwanted incidents including theft and to maintain law and order.

After obtaining suggestions views on the project from the participants in the meeting, the Deputy Chairman, Chennai Port Authority Thiru. S. Viswanathan, IAS explained on the doubts and questions raised by the public in the meeting.

Deputy Chairman informed that views, suggestions, opinions, and additional facilities requested by the public in this meeting, including the basic infrastructure facilities will be considered to include in this project after careful examination based on feasibility and site conditions. After obtaining Environmental Clearance, the Chennai Port Authority has proposed to start this project by February 2024 and it will be complete before 31st January of 2025.

Deputy Chairman informed that the fund sanctioned for this project by Government of India is Rs. 97.95 crores. The fund for the implementation of additional facilities as requested by the participants in the meeting will be managed by the M/s. Chennai Fishing Harbour Management Committee. Further he stated that the Chennai Port Authority will work together with Hon'ble MLA's and Fishermen Associations for the successful implementation of this project.

The meeting concluded after the vote of thanks by the Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board.

Copies of the petitions received from the public during the meeting are listed and enclosed with this minutes of the meeting.

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Chennai**

**District Collector**
**Chennai District**

சென்னை, காசிமேடு மீன்பிடிதுறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் குறித்து தி/ள். சென்னை மீன்பிடி துறைமுக மேலாண்மை குழு மற்றும் தி/ள். சென்னை துறைமுக ஆணையம் உத்தேசித்துள்ள திட்டத்தின் மீதான பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்ட நிகழ்வுகள் பற்றிய குறிப்பு:

| | | |
|---|---|---|
| திட்டத்தின் பெயர் | : | சென்னை, காசிமேடு மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் |
| தேதி மற்றும் நேரம் | : | 19.12.2023 காலை 11.00 மணி |
| இடம் | : | ரம்ஜான் மஹால், எண்.74/52, மேற்கு மாதா கோவில் தெரு, ராயபுரம், சென்னை – 13 |

முன்னிலை:

| | | |
|---|---|---|
| திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப. | : | மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் |
| முனைவர் R.ஜெயமுருகன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் சென்னை மாவட்டம் |
| திரு. S. விஸ்வநாதன், இ.ஆ.ப. | : | துணைத்தலைவர், சென்னை துறைமுக ஆணையம் |
| திரு.N. ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி | : | தலைமை பொறியாளர், சென்னை துறைமுக ஆணையம் |
| திருமதி.R. சுகந்தீஸ்வரி பிரியதர்ஷினி | : | துணை தலைமை பொறியாளர், சென்னை துறைமுக ஆணையம் |
| திருமதி.K. பைஸ் சுல்தானா | : | செயற் பொறியாளர், சென்னை துறைமுக ஆணையம் |

இக்கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களின் வருகைப் பதிவேடு இக்குறிப்புரையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை, காசிமேடு மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்தலுக்கான திட்டம் குறித்து கருத்துக் கேட்புக்கூட்டத்தை தலைமை ஏற்று நடத்திக்கொடுத்திட வருகை புரிந்த சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் சென்னை துறைமுக ஆணையத்தின் துணைத் தலைவர், தலைமை பொறியாளர், உயர் அதிகாரிகள், சென்னை மீன்பிடி துறைமுக மேலாண்மை குழுவைச் சார்ந்த உறுப்பினர்கள், தொழில் நுட்ப ஆலோசனை குழுவினர், பொதுமக்கள், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்கள், காவல்துறையினர் உள்ளிட்ட அனைவரையும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் சார்பில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் வரவேற்று உரையாற்றினார்.

இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம் 14/09/2006 அன்று அறிவித்துள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி ஆண்டொன்றுக்கு 10,000 டன்கள் அளவுக்கு மீன் பிடி திறன் கொண்ட மீன்பிடி துறைமுகங்கள் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது குறித்த நடைமுறையினை எடுத்துரைத்தார். பொதுமக்கள் இக்கூட்டத்தில் தெரிவிக்கும் கருத்துக்களும், ஆலோசனைகளும் சேகரிக்கப்பட்டு, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திற்கு அனுப்பப்படும் எனவும், கூட்டத்தை சுமூகமாகவும், அமைதியாகவும் நடத்துவதற்கு பூரண ஒத்துழைப்பை நல்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தனது உரையில், சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் குறித்த திட்ட அம்சங்களை எடுத்துக் கூறியதுடன், இத்திட்டம் குறித்த சில குறிப்புகளை வழங்கி இக்கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என அன்புடன் கேட்டுக் கொண்டார். மேலும் பொதுமக்கள் கூறும் கருத்துக்கள் அனைத்தும் பதிவுசெய்யப்பட்டு மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இக்கருத்து கேட்பு கூட்டத்தில் உரையாற்றிய சென்னை துறைமுக ஆணையத்தின் துணைத்தலைவர், திரு. S. விஸ்வநாதன், இ.ஆ.ப. அவர்கள் இத்திட்டம் குறித்த தனது சிறப்புரையில், 2021 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு தோராயமாக 97.95 கோடி மதிப்பீட்டுடன் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது எனவும், இத்திட்டத்தில் அனைத்து விதமான நவீனமயமாக்கும் திட்டங்கள் / வசதிகள் உள்ளன எனவும் கூறினார். இத்திட்டம் முடிவடையும்போது பொதுமக்கள் மற்றும் மீனவர் சமுதாயத்திற்கு மிகவும் பயனுள்ள வகையில் அமையும் எனவும் தெரிவித்தார்.

இக்கருத்துக்கேட்பு கூட்டத்தில் சென்னை துறைமுக ஆணையத்தின் செயற்பொறியாளர் திருமதி. K.பைஸ் சுல்தானா அவர்கள் இத்திட்டம் குறித்த அனைத்து அம்சங்களையும் விளக்கப் படத்துடன் எடுத்துரைத்தார். இத்திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட 26 திட்டங்கள், இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும் எனவும், முதல் கட்டத்தில் 17 திட்டங்களும், இரண்டாவது கட்டத்தில் 9 திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் எடுத்துறைத்தார்.

இத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட கீழ்கண்ட பல்வேறு அம்சங்களை ஒவ்வொன்றாக விரிவாக எடுத்துரைத்தார்.

- ரூ. 10 கோடி ரூபாய் செலவில் படகு தூக்கும் வசதி, படகு பழுதுபார்க்கும் முற்றம், மற்றும் ரூ. 60 லட்சம் செலவில் படகு பழுதுபார்க்க தேவையான உதிரி பாகங்கள் விற்கும் வளாகம் அமைக்கப்படும் என கூறினார்.
- ரூ.12 கோடி செலவில் இரண்டு நுழைவுவாயில்களுடன் கூடிய நிரந்தரமான சுற்றுச்சுவர் கட்டப்படும் எனவும், சுற்றுச்சுவர் அருகில் மழைநீர் வடிகால் வசதி, கேபிள் டிரன்ச் மற்றும் பாதசாரிகள் நடைபாதையுடன் கூடிய இருவழிச் சாலை வசதி அமைக்கப்படும் என்றும் கூறினார்.
- ரூ. 6 கோடி செலவில் விசைபடகு அணைமேடை (Trawler Wharf) CCTV கேமரா, தேவையான வெளிச்சத்துடன் கூடிய கொட்டகை அமைக்கப்படும் எனவும் கூறினார்.
- வடதிசையில் உள்ள வார்ஃப் அருகே ரூ. 1 கோடி செலவில் மீன் சுத்தம் செய்தல், பேக்கேஜிங் மற்றும் குளிர் சேமிப்பு வசதி உருவாக்கப்படும் என்று குறிப்பிட்டார்.
- உணவகம், ஏடிஎம், மருத்துவ சிகிச்சை மையம், போன்றவற்றுடன் கூடிய வணிக வளாகம், CCTV கட்டுப்பாடு அறையுடன் கூடிய நிர்வாக அலுவலகம் ரூ.3 கோடி செலவில் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.
- புயல், சுனாமி போன்ற இயற்கை பேரிடர்களின் போது துறைமுகத்தில் உள்ள மீனவர்கள், மீன்பிடி படகுகளில் செல்வோருக்கு எச்சரிக்கை வழங்கவும், மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் ரூ.1 கோடி செலவில் கப்பல் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு அமைப்பும் அமைக்கப்படும் என விளக்கினார்.
- இரண்டு வெவ்வேறு இடங்களில் இரு சக்கர / நான்கு சக்கர வாகன நிறுத்தம் ரூ.85 லட்சம் செலவில் அமைக்கப்படும் எனவும், ரூபாய் 2 கோடி செலவில் உயர் மட்ட மின் விளக்கு கோபுரம், மற்றும் தெரு விளக்குகளும் நிறுவப்படும் எனவும் கூறினார்.
- சுகாதாரமான கழிவறை வளாகம் ஒன்று தெற்கு அணைமேடை அருகே ரூ.20 லட்சம் செலவில் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.
- தென் புற வார்ஃப் அருகே சுகாதாரமான கழிவறை வளாகம், தண்ணீர் விநியோகத்தை உறுதிப்படுத்த 2,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தாழ்நிலை நீர்தேக்கதொட்டி மற்றும் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கதொட்டி ஆகியவை ரூ.4 கோடி செலவில் அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்தார்.

- மீனவர்கள், மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் பயன்பாட்டிற்காக 25 லிட்டர் LPH திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 500 LPH திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.50 லட்சம் செலவில் நிறுவப்படும் எனவும் கூறினார்.
- துறைமுக வளாகத்தில் சுத்தமான மற்றும் சுகாதாரமான சூழலை பராமரிக்க நிலையான திட மற்றும் திரவ கழிவு (STP, ETP) அமைப்புகள் ரூ.1.50 கோடி செலவில் ஏற்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்தினார்.
- துறைமுகத்திற்குள் பாதுகாப்பான சூழலை உறுதி செய்திட ரூ. 50 லட்சம் செலவில் அகச்சிவப்பு சிசிடிவி கேமராக்கள் கொண்ட கண்காணிப்பு அமைப்பு நிறுவப்படும் எனவும் கூறினார்.
- ரூ. 3 கோடி செலவில் மீன்பிடி துறைமுகத்தை நீர்வழி மேம்பாட்டிற்கு ஆழப்படுத்துதல் மற்றும் தூர்வாரும் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்றுரைத்தார்.
- இறால் விற்பனை முனையம் அமைத்திட போதுமான வெளிச்சத்துடன் கூடிய கொட்டகை மற்றும் சிசிடிவி கேமராக்கள் ரூ.2.36 கோடி செலவில் அமைக்கப்படும் என்றும், வடக்கு வார்ஃப் அருகே வலை சீர் செய்யும் கொட்டகையை ரூ. 2.20 கோடி செலவில் அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.
- மேற்குப் பகுதியில் ரூ. 48 லட்சம் செலவில் லாரிகள் நிறுத்துமிட வசதி மற்றும் தெற்குப் பகுதியில் புதிய வலை சீர் செய்யும் கொட்டகை ரூ.80 லட்சம் செலவில் அமைக்கப்படும் எனவும் எடுத்துரைத்தார்.
- ஒரு புதிய மீன் வெட்டும் கடை மற்றும் விற்கப்படாத மீன்களை அடுக்கி வைப்பதற்காக 30 அறைகள் கொண்ட நிரந்தர கட்டிடம் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.
- சில்லறை விற்பனை கடை பகுதியில் கான்கிரீட் தளம் அமைக்கப்படும் என்றும், தற்போது உள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் வடிகால்களை பழுதுபார்த்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும் என்றுரைத்தார்.

சென்னை, காசிமேடு மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டம் குறித்த முப்பரிமான மாதிரி தோற்றத்துடன் கூடிய ஒளி மற்றும் ஒலி படக்காட்சி தொகுப்பினை இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் சென்னை துறைமுக ஆணையம் சார்பில் திரையிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து சென்னை துறைமுக ஆணையம் சார்பில், திருவாளர்கள் கியூபர்ட் என்விரோ கேர் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் என்ற தொழில் நுட்ப நிறுவனத்தால் சுற்றுச்சூழல் தாக்கங்கள், சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் குறித்த விளக்கப்பட்டது. CRZ வரையறை வரைபடத்தின்படி, முன்மொழியப்பட்ட இத்திட்டம் கடலோர ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) பகுதிகளின் கீழ் விளக்கப்பட்டது. மேலும்

இத்திட்டத்திற்கான பரிந்துரை குறிப்புகளானது 07.03.2023 மற்றும் பரிந்துரை குறிப்புகளின் திருத்தமானது 06.06.2023 அன்றும் வழங்கப்பட்டுள்ளது குறித்தும் விளக்கப்பட்டதுடன் திட்டம் குறித்த கீழ்கண்ட காரணிகள் விளக்கப்பட்டது.

- சென்னை மீன்பிடித் துறைமுகத்தின் தற்போது உள்ள வசதிகள் மற்றும் இத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட கட்டமைப்பு வசதிகள் குறித்தும் இக்கருத்து கேட்புக் கூட்டத்தில் விளக்கப்பட்டது.
- நீர்நிலைகள், தேசிய பூங்காக்கள், பாரம்பரிய கட்டிடங்கள், காப்புக்காடுகள், இந்திய இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தளங்கள், நினைவுச் சின்ன கட்டமைப்புகள், துறைமுகம், சாலைகள் மற்றும் இரயில் நிலையங்கள் ஆகியவை குறித்தும் இக்கூட்டத்தில் விளக்கப்பட்டது.
- இந்த மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட நீர்த்தேவை, மின்சாரம் மற்றும் எரிபொருள் தேவை, கழிவு நீர் அகற்றும் முறைகள் குறித்தும் இக்கூட்டத்தில் தெளிவாக விளக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கட்டுமானம் மற்றும் செயல்பாட்டு ஆகிய இரு நிலைகளின் போது ஏற்படுவதாக கண்டறியப்பட்ட காற்று மாசுபாட்டின் ஆதாரங்கள் அதை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தின்போது விளக்கப்பட்டது.
- கட்டுமானம் மற்றும் செயல்பாட்டு நிலைகளின் போது நீர் மேலாண்மை, இரைச்சல் மேலாண்மை, கடல் சூழலியல் மேலாண்மை, எண்ணெய் கசிவின் தாக்கம், இயற்கை வளங்களின் மீதான மேலாண்மை குறித்த தணிப்பு நடவடிக்கைகள் குறித்தும் விளக்கப்பட்டது.
- சென்னை மீன்பிடி துறைமுகத்தினை தூர்வாருதல், தூர்வாருதலால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதன் மீதான உரிய நடவடிக்கைகள் குறித்து விளக்கப்பட்டது.

மேற்கண்ட விரிவான விளக்க உரை முடிவுற்ற பின்னர், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் தங்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை ஒவ்வொருவராக மேடையில் வந்து தெரிவிக்குமாறு தமிழ்நாடு மாசுகட்டுபாடு வாரியத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த கூட்டத்தின் போது பொதுமக்கள் தெரிவித்த கருத்துகள் பின்வருமாறு:

1. திரு. C. N. கேசவராமன், தலைவர், நாட்டு படகு மற்றும் கண்ணாடி இழைநார் படகு உரிமையாளர்கள் சங்கம், புதுவண்ணாரப்பேட்டை, சென்னை

இந்த கருத்துக்கேட்பு கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தமைக்கு நன்றி தெரிவித்து பேசிய இவர், இத்திட்டத்தின் கீழ் நுழைவு வாயில் அமைக்கப்பட இருப்பதால் எந்த நேரத்திலும் மீனவர்கள் தங்கள் படகுகளையும், மீன்பிடி வலைகளையும், சென்று பார்ப்பதற்கும், பணிகளை மேற்கொள்ள எவ்வித தங்குதடையின்றி அனுமதிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

மீனவர்கள் மற்றும் படகுகள் காணாமல் போனால் அதை கண்டுபிடிக்க தேவையான அதிவிரைவு மீட்பு படகுகள் இந்த துறைமுகத்தின் மூலம் வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

காசிமேடு நாகூரான் தோட்டம் பகுதிகளில் விசை படகுகளை நிறுத்த கூடுதலான துறைமுக மேடை (Wharf) அமைக்க வேண்டும் எனவும், நல்ல வெளிச்சம் தரக்கூடிய உயர் மட்ட மின் விளக்கு கோபுரம் அமைத்துத் தரவேண்டும் எனவும், சிறு தொழில் செய்யும் மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார்.

அரசாங்கம் மீன்களுக்கு நியாமான விலை நிர்ணயம் செய்ய வேண்டும் எனவும், மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய அனைத்து உபகரணங்களுக்கும் சரக்கு மற்றும் சேவை வரியை விதிக்கக்கூடாது எனவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மீன்வள பூங்கா அமைத்துத்தர வேண்டியும், இத்திட்டத்தின் கீழ் அமைய உள்ள ஒவ்வொரு கட்டுமானத்திற்கும் வரைபடம் மற்றும் அதன் மதிப்பு ஆகியவற்றை தெரிவிக்கக்கூடிய அறிவிப்பு பலகை வைக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார்.

கூட்டத்தின் போது ஒருவர் எழுந்து கூட்டத்தில் விளக்கப்பட்ட ஒளி படத்தின் நகலினை அனைவருக்கும் தர வேண்டும் என கூறினார். இக்கருத்துகேட்பு கூட்டம் குறித்து சரியான அறிவிப்பு ஏதும் வெளியாகவில்லை என கூறியபோது, கருத்துக்கேட்பு கூட்டத்தில் சலசலப்பு எற்பட்டது. இக்கருத்துகேட்பு கூட்டம் நடைபெறுவது குறித்த அறிவிப்பு 16.11.2023 தினத்தந்தி மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய இரு நாளிதழ்களிலும் வெளியிடப்பட்டன குறித்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் அவர்கள் தெளிபடுத்தினார்.

2. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஐ டிரீம் R. மூர்த்தி அவர்கள், இராயபுரம் சட்ட மன்ற தொகுதி, வட சென்னை.

இராயபுரம் சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற வகையில் இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்திய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்,

மீனவர்களின் நலனையும், மீன்பிடி துறைமுகத்தின் வசதிகளையும் நவீனப்படுத்த உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களை குறித்து பேசினார்.

100 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டம் மீனவர்களின் நலனுக்கானதே என்று கூறி இத்திட்டத்தை வரவேற்றார். மேலும் இத்திட்டம் எப்போது துவங்கும், எப்போது முடிவடையும் என்கின்ற விவரத்தை தேதியுடன் தெரிவிக்குமாறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

3. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஜே ஜே எபினேசர், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி, வட சென்னை

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாண்புமிகு டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் மீனவ சமூகத்திற்கு பெரிதும் பயன்தரும் இக்கனவு திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டுமென, சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களை நேரில் சந்தித்து கேட்டுக்கொண்டதாக தெரிவித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், இத்திட்டம் கொண்டு வரப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து எதுமில்லை என உறுதியுடன் கூறினார்.

மேலும் இத்திட்டத்தில் மீனவர் சங்கங்களின் ஆலோசனைகள் மற்றும் கோரிக்கைகளை ஏற்று திட்டத்தில் மாறுதல்கள் செய்து செயல்படுத்தப்பட வேண்டும் எனவும், மீன்பிடி துறைமுக வளாகத்தில் வங்கி சேவைகள், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வசதி (R.O. Plant) ஏற்படுத்தித்தரவும் ஆவண செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

காசிமேடு துறைமுகம், சென்னை துறைமுகத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தமிழக அரசின் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சில வசதிகளை செய்துதர முற்படும்போது அதற்கான உதவிகளை வழங்கிட வேண்டும் எனவும், இத்திட்டம் குறித்த விவரங்கள் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை தெரிவிக்கின்ற வகையில் காசிமேடு, மீன்பிடி துறைமுகத்தில் விளக்க பதாகை அமைக்கப்பட வேண்டும் எனவும்

கேட்டுக்கொண்டதுடன், இத்திட்டம் எப்போது துவக்கப்படும், எப்போது முடிக்கப்படும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

4. **திரு. E. ஆறுமுகம், தலைவர், சென்னை சிங்காரவேலர் கில்நெட் இரண்டு இஞ்ஜின் பைபர் கட்டுமரப் படகு மீனவர்கள் கூட்டணி நலச்சங்கம், புதுவண்ணை, சென்னை**

இத்திட்டம் குறித்து பேசிய இவர் 300 பைபர் கட்டுமரப் படகுகளை நிறுத்துவதற்கு இடம் மற்றும் 25 இன்ஜின்கள் பழுதுபார்ப்பதற்கு தேவையான மேற்கூரையுடன் கூடிய அமைப்பு ஆகியவற்றை அமைத்து தர வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

சாலை விரிவாக்கத்தின் போது அகற்றப்படும் கொட்டகைக்கு மாற்று இடமளிக்கவேண்டுமெனவும், நாகூரான் தோட்டம், பூண்டித்தங்கம்மாள் தெரு, அண்ணா நகர் நாதன் பிரேக் வாட்டர் ஆகிய மூன்று இடங்களில் உயர் மட்ட மின் விளக்குகள் (High Mast Light) அமைத்து தர வேண்டுமெனவும் கோரினார்.

நாகூரான் தோட்டம், அண்ணாநகர் மற்றும் அரசு மீனவர் காலனி, பூண்டித்தங்கம்மாள் தெரு என மூன்று இடங்களில் படகு அணையும் தளம் கட்டி கொடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை வைத்தார்.

மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவினை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கூட்டத்தின் போது நேரில் வழங்கினார்.

5. **திரு.V. தேசப்பன், துணைத் தலைவர், சென்னை திருவள்ளூர் காஞ்சிபுரம் மாவட்ட படகு மீனவர் நலச்சங்கம், புதுவண்ணாரப்பேட்டை, சென்னை**

மீனவ மக்களின் வாழ்வாதாரமான இந்த மீன்பிடி துறைமுகம் அடிப்படை வசதிகள் இன்றி 25 ஆண்டுகள் பின்தங்கியுள்ளது. எனவே, விசை படகுகள், நாட்டு படகுகள், மீனவர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி இத்திட்டத்தை விரைவாக உருவாக்கித்தருமாறு கேட்டுக்கொண்டார்.

6. **திரு.R. வரதன், தலைவர், சென்னை ஆழ்கடல் கில் நெட் (ம) லாங்லைன் டூனா பிஷிங் போட் உரிமையாளர் சங்கம், காசிமேடு, சென்னை**

மீனவ மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டம் விரைந்து முடிக்கபட வேண்டும் எனவும்,

N4 மீன் இறக்குதளத்தில் 50 மீட்டர் தூரத்திற்கு மேற்கூரை அமைக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். விசைப்படகுகள் நேரடியாக டீசல் பிடிக்க ஏதுவாக டீசல் நிரப்பும் நிலையங்கள் மற்றும் எல்லா வார்ஃப் பகுதியில் மின் இணைப்பு பெட்டி (Junction Box) வசதி ஏற்படுத்தி தரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

7. திரு.K. கபிலன், சென்னை விசை படகு மீனவர் நலச்சங்கம், இராயபுரம், சென்னை

மூன்றாம் தலைமுறை மீனவர்களாகிய எங்களின் கனவு திட்டமான இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டதுடன், சுற்றுச்சுவர், மேற்கூரை, படகு தூக்கும் வசதி, படகு தூக்கும் இயந்திரம் போன்றவை அமைத்து தர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும் இத்திட்டம் முடிக்கப்பட்ட பின்னர் அதனை முறையாக நிர்வகிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

8. திரு.N. இராஜசேகரன், பகுதி பிரதிநிதி, 49வது வார்டு, இராயபுரம், சென்னை

மீனவ சமுதாயத்திற்கு தேவையான எல்லா வசதிகளையும் இத்திட்டத்தின் மூலம் செய்து தருமாறு கேட்டுக் கொண்டார்.

9. திரு. ராஜா, தேசிய பொது செயலாளர், அகில இந்திய மீனவர் சங்கம், இராயபுரம், சென்னை

1983 காலகட்டத்தில் மீனவர் கிராமங்களாக இருந்த இப்பகுதி மீன்வள துறைக்கு வழங்கபட்டு பின் உலகத்தரம் வாய்ந்த மீன்பிடி துறைமுகத்தை அமைக்க, துறைமுகத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடம், தமிழக மீன்வள துறைக்கு மீண்டும் மாற்ற வேண்டுமென கோரிக்கை வைத்தார்.

சென்னை மீன்பிடி துறைமுக மேலாண்மை குழுவின் செயல்பாடுகளை விமர்சித்து பேசிய இவர் இத்திட்டம் உருவாக்கப்படுவது குறித்து மீனவ சங்கங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை என கூறினார்.

மீன்பிடி துறைமுகத்தில் சரியாக தூர்வாரப்படவில்லை எனவும், ஆதலால் தூர் வாரப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

துறைமுகத்தில் அன்றாட கழிவுகளை சேகரிக்க முறையான அமைப்பு இல்லை எனவும், நீர் குளிரூட்டும் தொழிற்சாலைகளுக்கு போதிய தண்ணீர் வசதி இல்லை எனவும், மீன் உலர்த்த, விற்பனை செய்ய வசதி இல்லை எனவும் தெரிவித்த இவர் இக்கருத்துகேட்பு கூட்டம் நடைபெறுதல் குறித்து சங்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தெரிவித்தார்.

இந்த மீன்பிடி துறைமுகத்தினை உலக அளவில் தரம் வாய்ந்ததாக உருவாக்கி மீனவ மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

10. திரு. Y. முகமது பரூக் , வட சென்னை மாவட்ட தலைவர், ஆம் ஆத்மி கட்சி, இராயபுரம், சென்னை

மீனவ மக்கள் வாழும் பகுதியில் சுகாதார வசதியினை ஏற்படுத்தித்தரவில்லை எனவும், தற்போது உள்ள வசதிகள் சுகாதாரமாக பராமரிக்கப்படுவதில்லை என்று கூறிய இவர், மீனவர் வாழும் பகுதியில் அடிப்படை சுகாதாரவசதிகளையும், அப்பகுதியில் வாழுகின்ற சூழலையும் மேம்படுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

மீனவர்களுக்கு கழிவறை மற்றும் ஓய்வறை, வியாபாரிகளுக்கு தனிவசதிகளையும் இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். வாகன நிறுத்தத்திற்கான கட்டண வசூலிப்பு குறித்து இத்திட்டத்தில் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

11. திரு. முனுசாமி, மாநில மீனவர் அணி தலைவர், பாரதிய ஜனதாக கட்சி

இத்திட்டத்தினை வரவேற்று பேசிய இவர், மீன் கழிவுகளை மகளிர் சுயஉதவி குழுக்கள் அமைத்து உரமாக தயாரிக்க தனி இடம் வேண்டும் எனவும், மத்திய அரசின் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட இந்த மீன்பிடி துறைமுகத்தினை நவீனமயமாக்கும் திட்டம் குறித்து பேசிய இவர், மத்திய, மாநில மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகிய துறைகளை கைகோர்த்து துறைமுகத்தை மேம்படுத்த வேண்டும் என்று கூறினார்.

இப்பகுதியில் அதிகமாக குற்றம் நடப்பதால் காவல் நிலையம் ஒன்று துறைமுக வளாகத்திற்குள் அமைக்க வேண்டுமெனவும், மாணவர்கள் பயன்பெறும் வகையில் கடல் ஆராய்ச்சிக்கு நூலகம் ஒன்றை அமைக்க வேண்டுமெனவும், கேட்டுக்கொண்டதுடன் மீன்பிடி தடைகாலத்தில் மாற்று தொழில் அமைத்துதருமாறு கோரிக்கையை முன் வைத்த இவர், மீனவர் குடும்ப நலம் பெற மீன்பிடி தடைகாலங்களில் வரியை உயர்த்தாமலும் மீனவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கவும் சென்னை மீன்பிடி துறைமுக மேலாண்மை குழு ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சென்னை துறைமுக ஆணையம், நிறுவனங்களின் சமூக நடவடிக்கைகள் நிதியின் கீழ் (Corporate Social Responsibility – CSR) அதிக மதிப்பெண் பெற்ற மீனவ சமுதாய மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குமாறும் கோரிக்கை வைத்தார்.

12. டாக்டர் நாஞ்சில் P. ரவி, தலைவர் அனைத்து மீனவர் சங்கம், தண்டையார் பேட்டை, சென்னை

இத்திட்டத்தை வரவேற்று பேசிய இவர் இத்திட்டத்தில் N4 முதல் Zero gate வரை காசிமேடு மீன்பிடி துறைமுக வளாக்திற்குள் சாலை அமைக்க எதிர்ப்பினை பதிவு செய்தார்.

இத்துறைமுகப்பகுதியில் குப்பைகள் முறையாக அகற்றப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

13. திரு. V. சங்கர், பொது செயலாளர், மீனவர் மக்கள் முன்னனி கட்சி, இராயபுரம், சென்னை

இக்கருத்துகேட்பு கூட்டம் நடைபெறுவது குறித்த அறிவிப்பு 15 நாட்களுக்கு முன்னதாக வெளியிட வேண்டும் எனவும், அனைத்து அமைப்புகளுக்கும் தெரியபடுத்த வேண்டும் எனவும் கூறினார்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின் துறைமுகத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்கப்படும் நிலை உருவாகும் என்பது குறித்து தனது அச்சத்தை தெரிவித்தார். மேலும் சென்னை துறைமுக ஆணையம் மீனவ மக்களுக்கு நிவாரணம் ஏதும் வழங்கவில்லை எனவும், மீன் உலர்த்துவதற்கான இடம் மீனவர் அல்லாத பிறருக்கு வழங்கப்படுகின்றது என்றும் கூறினார்.

இக் கருத்து கேட்பு கூட்டத்தில் திரு. R. ஜெயகுமார், தலைவர், இறால் எடைபோடும் வியாபாரிகள் சங்கம், காசிமேடு, சென்னை அவர்கள் உரையாற்ற துவங்கும்போது கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை திருப்பி அனுப்ப வேண்டுமென கூறினார், இதனால் கூட்டத்தில் திடீரென சலசலப்பு ஏற்பட்டு அனைவரும் மேடை மீது ஏறி முற்றுகையிட்டு வாக்குவாதம் செய்தனர், பின்னர் காவல் துறையினர், மாண்புமிகு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் மாண்புமிகு டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இக்கூட்டத்தை அமைதியான முறையில் நடத்த ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்து அமைதிப்படுத்திய பின்னர் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

14. திரு. K. ராஜேந்திர பாபு, துணைத்தலைவர், சென்னை மீனவர் நலச்சங்கம், இராயபுரம், சென்னை

மீனவமக்கள் படும் சிரமங்கள் குறித்து பேசிய இவர், இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். மீன் வியாபாரிகள் வியாபாரம் செய்ய போதிய மின்விளக்கு வசதி மற்றும் மீனவமக்களுக்கு விளையாட்டு மைதானம் அமைப்பது

ஆகியவை இத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகளை தொகுத்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனவும், தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு அதற்கான செயல் திட்டம் (Action Plan) பெறப்படும் எனவும், உங்கள் அனைத்து கோரிக்கைகளும் பதிவு செய்யப்படும் எனவும், வருகை புரிந்த அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்ததை தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

15. திரு. கு. பாரதி, தென்னிந்திய மீனவர் சங்கம், நொச்சிகுப்பம், மயிலாப்பூர், சென்னை

மீனவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் மற்றும் நவீனப்படுத்தும் எனக் கூறி இத்திட்டத்தை ஆதரித்து பேசிய இவர் சமீபத்தில் கடற்கரை மண்டல ஒழுங்குமுறை அறிவிப்பாணை 2019–ன் கீழ் வெளியிடப்பட்ட 104 முதல் 109 வரை உள்ள வரைவு கடற்கரை மண்டல மேலாண்மை திட்ட வரைபடத்தில் சுமார் 7 கிலோ மீட்டர் அளவிற்கு வடக்கு மற்றும் தெற்கு பகுதிகள் துறைமுக நிர்வாக எல்லையாக அறிவிப்பு செய்யப்பட்டதை இரத்து செய்திவேண்டுமென தெரிவித்தார்.

16. திரு. ஜெ. கோசுமணி, மாநில மீனவர் அணி செயலாளர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மைலாப்பூர், சென்னை

மீனவர்களின் அடிப்படை பிரச்சனைகளை புரிந்து இந்த கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறுவதாக பாராட்டிய இவர், சென்னை துறைமுக ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த மீன்பிடி துறைமுகத்தை தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என கூறினார்.

மீனவர்களின் 25 ஆண்டு கால அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். மேலும், பாதாள சாக்கடை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் எனவும் கேட்டுகொண்டார்.

17. திரு. மகேஷ், தலைவர், பாரம்பரிய மீனவர் சங்கம், நொச்சிகுப்பம், அடையாறு, சென்னை

இத்திட்டம் தாமதமாக வந்தாலும் இத்திட்டத்தை தாம் முழுமையாக வரவேற்பதாக தெரிவித்தார். மீன்பிடி துறைமுகத்தை ஒட்டி சுற்றுச்சுவர் அமைக்கப்படவிருப்பதால் மீனவர்கள் மற்றும் படகு உரிமையாளர்களுக்கு

இவ்வளாகத்திற்குள் வந்து செல்ல நுழைவு கட்டணம் விதிக்கப்பட கூடாது எனவும் கேட்டுக் கொண்டார்.

இனிவரும் காலங்களில் துறைமுக நிர்வாகத்தினர், அனைத்து மீனவ கிராமங்களின் பிரதிநிதிகளையும் இணைத்து அவர்களின் ஒப்புதலுடன் எல்லா திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

18. **திரு.பா. கோதண்டன், தலைவர், வடசென்னை மீனவர் கிராமங்கள் ஐக்கிய சபை, இராயபுரம், சென்னை**

இத்திட்டத்தை வரவேற்று பேசிய இவர், மீன் விற்பனை செய்யும் இடத்திற்கு கூடாரம் அமைத்துத்தரவும், வியாபாரிகளுக்கான இடத்தை 15'x 15' அளவில் இருந்து 1000 சதுர அடிக்கு அதிகப்படுத்தி தர வேண்டும் எனக்கூறியதுடன், திருட்டு மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் இங்கு நிலவுவதால் சுற்றுச்சுவர் அமைத்து தர வேண்டியது அவசியம் எனவும் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்கள் தங்களது கருத்துகளை இக்கருத்துகேட்பு கூட்டத்தில் தெரிவித்த பின்னர், சென்னை துறைமுக ஆணையத்தின் துணைத்தலைவர், திரு. S. விஸ்வநாதன், இ.ஆ.ப. அவர்கள் இத்திட்டம் குறித்து எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்கு விளக்கமளித்து உறையாற்றினார்.

இத்திட்டம் குறித்து பொதுமக்கள் இந்த கருத்துக்கேட்பு கூட்டத்தில் தெரிவித்துள்ள கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கருத்தில் கொண்டு கூடுதல் திட்டங்கள் சேர்க்கப்படுவதற்கான சாத்திய கூறுகள், கள ஆய்வுகளின் அடிப்படையில் இறுதி செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் அனுமதி பெற்றப்பின் 2024 பிப்ரவரி மாதம் இத்திட்டத்தின் கட்டுமான பணிகள் துவங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் தேதிக்குள் முடிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கு இந்திய அரசு ஒதுக்கிய 97.95 கோடி ரூபாயில் மேற்கண்ட வசதிகளை உருவாக்கித்தர வேண்டிய பணிகள் சென்னை துறைமுக ஆணையம் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார். மேலும், இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதியை தி/ள். சென்னை மீன்பிடி துறைமுக மேலாண்மை குழு வழங்கும் எனவும் தெரிவித்தார். மேலும், இத்திட்டம் செயல்படுத்துதல் தொடர்பாக மாண்புமிகு

சட்டமன்ற உறுப்பினர்கள், மீனவ சங்கங்கள் உள்ளிட்ட அனைவரின் ஒத்துழைப்புடன் இணைந்து செயல்படுவோம் எனவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு மாசுகட்டுபாடு வாரிய, சென்னை மாவட்ட உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் நன்றியுரைக்குபின் இக்கூட்டம் நிறைவுபெற்றது.

இக்கூட்டத்தின் போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் நகல் பட்டியலிடப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

Rashmi S Zagade

27/12/2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம்
சென்னை

மாவட்ட ஆட்சியர்,
சென்னை மாவட்டம்